**செய்தி வெளியீடு** **நாள் : *27.10.2024***

**கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மற்றும் சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. இதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.**

**மாண்புமிகு அமைச்சர்கள் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் ஆகியோர் தகவல்.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படியும் **மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலோடு இன்று (27.10.2024) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்கள் சென்னையிலிருந்து அவர்களின் சொந்த ஊருக்கு செல்ல அரசு ஏற்பாடு செய்த சிறப்பு பேருந்துகளின் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள்** ஆகியோர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

**மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படியும், **மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலோடும் கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்கள் சென்னையிலிருந்து அவர்களின் சொந்த ஊருக்கு செல்ல அரசு ஏற்பாடு செய்த சிறப்பு பேருந்துகளின் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையிலே இந்த ஆய்வினை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும்** உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் இங்கிருந்து இயக்கப்படுகின்ற பேருந்து வசதிகள் குறித்த விவரங்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அக்டோபர் *28* முதல் *30*-ஆம் தேதி வரை *5* லட்சம் பயணிகள் பயணிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலே கிளாம்பாக்கம், கோயம்பேடு, மாதாவரம் மூன்று இடங்களில் இருந்து இந்த பேருந்துகள் இயக்கப்பட இருக்கின்றன. வழக்கமாக இயக்கப்படுகின்ற அரசு பேருந்துகள் - *3408*. தீபாவளி-க்காக இயக்கப்படுகின்ற சிறப்பு அரசு பேருந்துகள் - *4250,*

ஆம்னி பேருந்துகள் – 2000, இந்த பேருந்துகளை நிறுத்துவதற்கான வசதிகளை கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் ஒய்வுநிலை பேருந்துகள் நிறுத்துமிடம் முதலிடத்தில் மதுரை அரசு போக்குவரத்து கழக பேருந்துகளும், இரண்டாம் இடத்தில் நாகர்கோயில், திருநெல்வேலி மார்க்கமாக செல்கின்ற பேருந்துகளும், மூன்றாம் இடத்தில் கோயம்புத்தூர், மற்றும் விழுப்புரம் மார்க்கமாக செல்கின்ற பேருந்துகளும் நிறுத்தப்படும். நான்காம் இடத்தில் ஆம்னி பேருந்துகள் நிறுத்தப்படும். இது தவிர இந்த பேருந்துகள் இயக்கப்படுகின்ற பொழுது இன்னும் கூடுதலான பேருந்துகள் தேவை என்றால் அவற்றை ரிசர்விலே கொண்டு வந்து நிறுத்துகின்ற அந்த வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது.

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் கும்பகோணம் அரசு போக்குவரத்து கழகத்திற்கான பேருந்துகள் நிறுத்தப்படும். அதேபோல் கரசங்கால் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் அரசு வாடகை அடிப்படையில் இயக்க இருக்கின்ற தனியார் ஒப்பந்த வாகனங்கள் நிறுத்தப்படும். மறைமலைநகர் நகராட்சி மைதானத்தில் ஆம்னி பேருந்துகள் நிறுத்தப்படும். இது இல்லாமல் சி.எம்.டி.ஏ. சார்பாக இந்த கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் தேவையான வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த பேருந்துகள் நிறுத்துகின்ற அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கரசங்கால், மறைமலைநகர் போன்ற பகுதிகளில் மின்விளக்குகள், குடிநீர், கழிப்பறைகள், மேசை, நாற்காலிகள் போன்ற அடிப்படை வசதிகளும் செய்யப்படுகின்றது. இங்கே நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் 8 மின்சார வாகனங்கள், மாநகராட்சி போக்குவரத்து நிலையங்களில் இருந்து வெளியூர் செல்லும் போக்குவரத்துகள் இயக்கப்படும் பிரதான கட்டங்கள் வரை பிரத்தியேக மாநகரப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படும்.

அதேபோல் டிஜிட்டல் முறையில் பெயர் பலகைகள் வழிநெடுகிலும் ஆங்காங்கே கூடுதலாக அமைக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் எந்த பிரச்சினையும் இல்லாமல் பார்த்து அவர்களுடைய பேருந்துகள் நிறுத்தும் இடத்திற்கு செல்லக் கூட வசதிகளை. அதேபோல் ஒலிபெருக்கி வசதி கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டு, அது குறித்த தகவல்கள் அவ்வப்பொழுது வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பெரிய அளவில் மக்கள் திரண்டு வருகின்ற அந்த சூழ்நிலையில் இலவச மருத்துவமனையும், ஆம்புலன்ஸ் வசதிகளும் செய்யப்பட்டு இருக்கின்றது. 2000 பயணிகள் அமர்ந்து செல்வதற்கு இருக்கை பொருத்தப்பட்டு இருக்கிறது. அதேபோல் பாதுகாப்பு வசதிகளுக்காக கூடுதலாக பாதுகாவலர்கள் மற்றும் காவல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். தூய்மை பணியாளர்கள் மூன்று மடங்கு அதிகரிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இரண்டு பேருந்து முன்பதிவு மையங்கள் தவிர கூடுதலாக மூன்று மையங்கள் அமைக்கப்பட்டு மொத்தம் ஐந்து முன்பதிவு மையங்கள் இங்கே செயல்படுகின்றது. பிரத்தியேகமாக மூன்று உதவி எண்கள் வழங்கப்படுகின்றது அவற்றை இப்பொழுது உங்கள் இடத்தில் தெரிவிக்கின்றேன் :

- **3 உதவி எண்கள் : 7845700557, 7845727920, 7845740924.**
- தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் 8 எண்ணிக்கைகள்
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் *18* எண்ணிக்கைகள் பொருத்தப்பட்டுள்ளது, தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு பாலூட்டும் அறைகள் மூன்று எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளது.

முன்பதிவு ஆட்டோ மற்றும் டாக்ஸி புக்கிங் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது. இலவசமாக ட்ராலிகள் வழங்கப்பட்டிருக்கின்றது. தங்குமிடம் வசதிகள் *140* எண்ணிக்கையிலே அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த வசதிகள் எல்லாம் இங்கே வருகின்ற பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் அதேபோன்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே** நடைபெற்ற கூட்டத்தில் **நம் முதல்வர் அவர்கள்** வழங்கிய உத்தரவுப்படி தலைமைச் செயலாளர் **அவர்கள்** ஒன்றிய அரசிடம் பேசி டோல்கேட்டில் நெரிசல் இல்லாமல் செல்வதற்கான வழிவகை செய்யப்பட்டு இருக்கின்றது.

அதேபோன்று காவல்துறை நண்பர்களுக்கும் **மாண்புமிகு முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டிருக்கின்றார்கள். போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இங்கே பயணிக்கின்ற வாகனங்கள் செல்வதற்கும் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாகவும் *10* கிலோமீட்டர்-க்கு ஒரு ஜீப் வழங்கப்பட்டு, அதை பேட்ரோலிங் செய்வார்கள், இதுவரை போக்குவரத்து கழகத்தில் செய்ததில்லை. நெடுஞ்சாலைத்துறை செய்வார்கள், காவல்துறை செய்வார்கள். இந்த முறை போக்குவரத்து கழகத்தின் சார்பாகவும் பேட்ரோலிங் செய்யப்படுகிறது. ஏனென்றால் சின்ன விபத்து ஏற்பட்டால் கூட அதனால் ஏற்படுகின்ற டிராபிக் ஜாமில் வாகனங்கள் வராதது போன்ற ஒரு செய்தியை பரப்பி பதட்ட சூழ்நிலை உண்டாக்குவதை தவிர்ப்பதற்காக அந்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருக்கின்றது. இவை எல்லாவிதமான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றது.

இதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். பொது மக்களை பொருத்தவரை தங்களுடைய சொந்த வாகனங்களில் செல்பவர்கள் ஓ.எம்.ஆர், திருப்போரூர் வழியாக சென்றால் மாநகருக்குள் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்கு உதவியாக இருக்கும். இதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று இவ்விடத்தில் கேட்டுக்கொள்கிறோம். இந்த பேருந்து வசதிகள் இங்கே கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற வசதிகள் பொதுமக்கள் தங்களுடைய சொந்த ஊருக்கு சிறப்பாக சென்று சேர்வதற்காக

ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. எனவே அவற்றை தக்க வகையில் பயன்பெற்று ஒத்துழைக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். **இவ்வாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்**.

இந்த ஆய்வின்போது காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.செல்வம் அவர்கள், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், போக்குவரத்து ஆணையர் திரு.சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் இ.ஆ.ப. அவர்கள், தாம்பரம் காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) திரு.சமய், இ.கா.ப., அவர்கள், பள்ளிக்கரணை காவல் துணை ஆணையர் திரு.ஏ.சி.கார்த்திகேயன் அவர்கள், SETC மேலாண் இயக்குநர் திரு.ஆர்.மோகன், TNSTC மேலாண் இயக்குநர் திரு.கே.குணசேகரன், தலைமை நிர்வாக அலுவலர் டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சுபா நந்தினி, போக்குவரத்துக் கழக இணை மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.நடராஜன், பொது மேலாளர்கள், காட்டான் குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் துணைத் தலைவர் திரு.வி.இளங்கோவன், மறைமலைநகர் நகர்மன்ற தலைவர் திரு.ஜெ.சண்முகம், சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர் திரு.பாலமுருகன், செயற்பொறியாளர் திரு.ராஜன்பாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.அரசு அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.